بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 24/11/2023 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

☆ **ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் வருகையின் நோக்கமும், இக்காலத்தில் ஒரு சீர்திருத்தவாதியின் வருகையின் அவசியமும்**

☆ **மத்திய கிழக்கில் உருவாகியுள்ள போர் சூழலைக் கருத்தில் கொண்டு சிறப்பு துஆக்களின் பக்கம் மீண்டும் மீண்டும் கவனமூட்டல்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾

اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் தம் எழுத்துக்களிலும், தம் வழிகாட்டல்களிலும் தம் வருகையின் நோக்கம் குறித்தும் இக்காலத்தில் ஒரு சீர்திருத்தவாதியின் வருகையின் தேவையைக் குறித்தும் எண்ணற்ற இடங்களில் எடுத்துக் கூறியுள்ளார்கள். அல்லாஹ்வின் சார்பாக அன்னார் வந்திருப்பது உரிய நேரத்தி(ல் காலத்தி)ன் அவசியத்திற்கேற்பவே ஆகும் என்றும் அல்லாஹ்வின் நடைமுறை மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்பவே ஆகும் என்றும் அன்னார் நிரூபித்துள்ளார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** “சான்றை முழுமைப்படுத்துவதற்காக நான் வெளிப்படுத்த விரும்புவதென்னவென்றால், இறைவன் இக்காலத்தை இருளானதாகக் கண்டு கவனமின்மை, நிராகரிப்பு, ஷிர்க் ஆகியவற்றில் உலகம் மூழ்கி இருப்பதைக் கண்டு நம்பிக்கை, உண்மை, இறையச்சம், நேர்மை ஆகியவை வீணாகிப் போவதைக் கண்டு என்னை அனுப்பியுள்ளான். இதன் மூலமாக ஞானம், செயல், நல்லொழுக்கம், நம்பிக்கை ஆகியவற்றின் உண்மையை மீண்டும் உலகில் நிலைநாட்ட வேண்டும் என்பதற்காகவும் தத்துவவியல், இயற்கையியல், இபாஹத் (எனும் அனைத்தையும் ஆகுமானதாகக் கருதும் கொள்கை), ஷிர்க் மற்றும் நாத்திகம் ஆகியவற்றின் உடையில் இந்த இறைத் தோட்டத்திற்கு ஏதேனும் நஷ்டம் ஏற்படுத்த விரும்புவர்களின் தாக்குதல்களில் இருந்து இஸ்லாத்தைக் காப்பதற்காகவும் என்னை அனுப்பியுள்ளான். ஆகவே, உண்மையைத் தேடுபவர்களே சிந்தித்துப் பாருங்கள்! இஸ்லாத்திற்கு வானத்து உதவியின் தேவையுள்ள நேரமாக இது இல்லையா என்ன? 13 ஆம் நூற்றாண்டாக இருந்த கடந்த நூற்றாண்டில் இஸ்லாத்திற்கு என்னென்ன வேதனைகள் வந்தடைந்தன என்றும், இருள் பரவியதன் காரணமாக பொறுத்துக் கொள்ள இயலாத என்னென்ன காயங்கள் நமக்கு ஏற்பட்டன என்றும் இதுவரை உங்கள் மீது நிரூபிக்கப்படவில்லையா என்ன? என்னென்ன ஆபத்துகள் இஸ்லாத்தை சூழ்ந்துள்ளன என்பதை இப்போது வரை நீங்கள் அறிந்து கொள்ளவில்லையா என்ன? எந்த அளவு மக்கள் இஸ்லாத்தை விட்டு வெளியேறி விட்டார்கள் என்றும், எந்த அளவு மக்கள் கிறிஸ்தவர்களுடன் சேர்ந்து விட்டார்கள் என்றும், எந்த அளவு மக்கள் நாத்திகர்களாகவும் பௌதிகர்களாகவும் ஆகிவிட்டார்கள் என்பதையும், ஷிர்க் மற்றும் பித்அத் ஆகியவை தவ்ஹீது மற்றும் சுன்னத்தின் இடத்தை எந்த அளவு பிடித்துக் கொண்டன என்பதையும், இஸ்லாத்தை மறுத்து எந்த அளவு நூல்கள் எழுதப்பட்டு உலகில் வெளியிடப்பட்டுள்ளன என்பதையும் பற்றிய செய்திகள் இப்போது வரை உங்களுக்குக் கிடைக்கவில்லையா என்ன?

ஆகவே, இப்போது நீங்கள் சிந்தித்துக் கூறுங்கள்! இந்த வெளிப்புற தாக்குதல்களை எதிர்கொள்ள இந்த நூற்றாண்டில் இறைவன் புறமிருந்து இத்தகைய நபர் அனுப்பப்படுவதன் அவசியம் தற்போது இல்லையா என்று கூறுங்கள்? அவசியம் உள்ளது என்றால், நீங்கள் வேண்டுமென்றே இறை அருளை மறுக்க வேண்டாம். இந்த நூற்றாண்டுக்குப் பொருத்தமான முறையில் இந்த நூற்றாண்டில் வருவதற்கு அவசியமாக இருந்த அந்த நபரை விட்டு நீங்கள் முகம் திருப்பிக் கொள்ள வேண்டாம். அவரைக் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆரம்பத்திலேயே செய்தி கூறிவிட்டார்கள்.”

**(இறைத்தூதர் என்று வாதித்து) வரக்கூடிய ஒருவருடைய உண்மையைக் கண்டறிந்து கொள்ளும் அளவுகோளைப் பற்றி எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** “ஒரு நபரை உண்மையானவர் என்று ஏற்றுக் கொள்வதற்கு அவரைப் பற்றிய வெளிப்படையான செய்திகள் ஏதேனும் ஒரு வானத்தின் நூலில் (இறை மறையில்) இருக்கவும் வேண்டும் என்பது அவசியம் இல்லை. இந்த நிபந்தனை அவசியம் என்றால், எந்த ஒரு நபியின் நுபுவ்வத்தும் நிரூபணமாகாது. உண்மையான விஷயம் என்னவென்றால், ஒருவருடைய நபித்துவ வாதம் பார்க்கப்படும் போது அனைத்தையும் விட முதலில் காலத்தின் தேவை பார்க்கப்படுகின்றது. அடுத்ததாக, நபிமார்கள் நிர்ணயித்த நேரத்தில் அவர் வந்துள்ளாரா, இல்லையா என்றும் பார்க்கப்படுகிறது. பிறகு, இறைவன் அவருக்கு உதவி செய்துள்ளானா இல்லையா என்றும் பார்க்கப்படுகிறது. அடுத்ததாக, எதிரிகள் செய்துள்ள ஆட்சேபனைகளுக்கு முழுமையான முறையில் பதில் கொடுக்கப்பட்டுள்ளதா என்றும் பார்க்க வேண்டும்.

இந்த அனைத்து விஷயங்களும் பூர்த்தியானால் அந்த நபர் உண்மையாளர் என்று ஒப்புக்கொள்ள வேண்டும்; இல்லையெனில் கிடையாது. தற்போது இஸ்லாமிய பிரிவினையை நீக்குவதற்காக, வெளிப்புறத் தாக்குதல்களிலிருந்து இஸ்லாத்தைக் காப்பாற்றுவதற்காக, தொலைந்து போன ஆன்மிகத்தை உலகில் மீண்டும் நிலை நாட்டுவதற்காக, சந்தேகத்திற்கிடமின்றி வானத்து சீர்திருத்தவாதி ஒருவரின் தேவை உள்ளது என்று காலம் தன் நிலை குறித்து முறையிடுவது இப்போது தெளிவாகத் தெரிகிறது. அந்த சீர்திருத்தவாதி நம்பிக்கை அளிக்கும் விதமாக மீண்டும் ஈமானிய வேர்களுக்கு நீர் ஊற்றுவார். இவ்வாறு தீமை, பாவம் ஆகியவற்றிலிருந்து வெளியேற்றி நன்மை, நேர்மை ஆகியவற்றின் பக்கம் கவனமூட்டுவார். ஆகவே, உரிய நேரத்தில் நான் வந்திருப்பது எதை வெளிப்படுத்துகிறது என்றால், மார்க்க துவேஷம் கொண்ட மனிதரையன்றி வேறு எவரும் இதை மறுக்க மாட்டார் என்று நான் கருதுகிறேன்.

இரண்டாவது நிபந்தனையாக காண வேண்டியது என்னவென்றால், நபிமார்கள் நிர்ணயித்த நேரத்தில் வந்துள்ளேனா, இல்லையா என்பதாகும். இந்த நிபந்தனையும் என் வருகையால் முழுமையாகி விட்டது. ஏனென்றால், ஆறாயிரம் (ஆண்டுகள்) முடிவடையும்போது வாக்களிக்கப்பட்ட அந்த மஸீஹ் தோன்றுவார் என நபிமார்கள் முன்னறிவித்துள்ளார்கள். ஆகவே, சந்திர கணக்கின்படி ஹஸ்ரத் ஆதம் அவர்களின் காலம் முதல் பார்க்கும்போது ஆறாயிரம் முடிவடைந்துவிட்டது. சூரிய கணக்கின்படி ஆறாயிரம் முடிவடையப் போகிறது. அதுமட்டுமின்றி, ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்திலும் ஒரு சீர்திருத்தவாதி தோன்றுவார்; அவர் மார்க்கத்தைப் புதுப்பிப்பார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். இப்போது 14 ஆம் நூற்றாண்டில் 21 ஆண்டுகள் கழிந்து விட்டன. 22 ஆம் ஆண்டு கழிந்து கொண்டிருக்கின்றது. சீர்திருத்தவாதி வந்துவிட்டார் என்பதற்கு இது அடையாளம் இல்லையா என்ன?”

அந்நியர்கள் ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக் கொள்ளவில்லை என்றாலும், நம்முடைய எதிரிகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் உண்மையை ஒப்புக்கொண்டாலும் ஒப்புக் கொள்ளவில்லை என்றாலும், இஸ்லாத்தில் ஏதேனும் மஹ்தி மற்றும் சீர்திருத்தவாதியின் தேவை உள்ளது; அவர் இஸ்லாமிய கப்பலைத் தாங்கிப் பிடிக்க

வேண்டும் என்று இப்போது இவர்களே கூக்குரலிட்டு கூறுகிறார்கள். ஆனால் வரக்கூடியவர் முன்னறிவிப்கேற்ப வந்துவிட்டார். அவர் காலத்தின் தேவைக்கேற்ப வந்து விட்டார். அவரை ஏற்றுக் கொள்வதற்கு இவர்கள் ஆயத்தமாக இல்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் வெறும் வாதம் மட்டும் செய்யவில்லை. மாறாக, வாதத்துடன் தம் உண்மைக்கு ஆதரவாக எண்ணற்ற அடையாளங்களையும் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்:** "ஒரு மாபெரும் முன்னறிவிப்பு உள்ளது. இன்றிலிருந்து 23 ஆண்டுகளுக்கு முன் பராஹீனே அஹ்மதிய்யாவில் (அந்த) இல்ஹாம் உள்ளது. அது என்னவென்றால், 'இந்த இயக்கத்தை அழிக்க மக்கள் முயற்சி செய்வார்கள். எல்லாவித சூழ்ச்சிகளையும் பயன்பாட்டில் கொண்டு வருவார்கள். ஆனால் நான் இந்த இயக்கத்தை அதிகரிக்கச் செய்வேன்; முழுமைப்படுத்துவேன். அது ஒரு படையாக ஆகிவிடும். கியாமத் வரையிலும் அதன் வெற்றி இருக்கும். மேலும், நான் உமது பெயரை பூமியின் எல்லைகள் வரை பிரசித்தியடையச் செய்வேன். கூட்டம் கூட்டமாக வெகு தூரத்தில் இருந்து மக்கள் வருவார்கள். எல்லாப் புறமிருந்தும் பொருளாதார உதவி வரும். இந்த ஆயத்தம் விண்ணில் நடந்து கொண்டிருக்கின்றது. ஆகவே வீடுகளை விரிவு படுத்துவீராக.' இப்போது பாருங்கள்! இது எந்தக் காலத்தில் செய்யப்பட்ட முன்னறிவிப்பாகும்! இன்று அது நிறைவேறுகிறது. கண்ணுள்ளவர்கள் இதைப் பார்க்கிறார்கள். ஆனால் எவர்கள் குருடர்களாக இருக்கிறார்களோ அவர்களைப் பொறுத்தவரை இப்போது வரை எந்த அடையாளமும் வெளிப்படவில்லை."

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முன்னேற்றம், இலட்சக்கணக்கான எண்ணிக்கையில் மக்கள் ஜமாஅத்தில் இணைவது, தியாகத்தில் முன்னேறுவது ஆகியவை இன்றும் கூட ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் உண்மைக்கான சான்று ஆகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் தூதுச் செய்தி சென்றடையாத எந்தவொரு நாடும் உலகில் இல்லை. அன்னாருடைய தூதுச் செய்தியின் விளைவால் நல்ல ஆன்மாக்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் கவனம் பிறந்துள்ளது. அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். இன்னும் கூறுவதென்றால், சில இடங்களில் எவ்வாறான சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன என்றால் அல்லாஹ்வே மக்களுக்கு வழிகாட்டியுள்ளான். அவர்கள் ஜமாஅத்தில் இணைந்துள்ளார்கள். எதிரிகளின் எதிர்ப்புகள் இருந்த போதிலும் ஜமாஅத்தினர்கள் ஈமானை அல்லாஹ் உறுதியாக்கியுள்ளான்; உறுதியாக்கிக் கொண்டே செல்கின்றான். ஆகவே இன்றும் கூட நாம் அல்லாஹ்வின் இந்த உதவிகளின் காட்சிகளைக் காண்கிறோம் என்றால் இது ஓர் அஹ்மதிக்கு (அவருடைய) ஈமானை உறுதிப்படுத்தக்கூடிய வழிமுறையாக உள்ளது.

*இதற்குப் பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள், நல்லியல்பு கொண்ட மக்கள் உண்மையை ஏற்றுக் கொண்டு ஈமானிலும் நம்பிக்கையிலும் முன்னேறியது தொடர்பாக பல்வேறு சம்பவங்களை எடுத்துக்கூறிய பிறகு கூறினார்கள்:*

மக்களுடைய உள்ளங்களை இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் பக்கம் எவ்வாறு அல்லாஹ் திருப்புகிறான் என்பதைப் பாருங்கள்! கிறிஸ்தவம் தன்னுடைய கொடியை உலகில் நிலைநாட்டக் கூடிய பேச்சுக்களைப் பேசியது எங்கே! ஆனால் தற்போது ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் கிறிஸ்தவர்கள் வந்து கொண்டிருப்பது எங்கே! இந்த அனைத்தையும் கண்ட பிறகும் கூட பெயர் அளவிலான மார்க்கங்களுடைய குத்தகைக்காரர்களின் கண்கள் திறக்கவில்லை என்றால் அவர்களுடைய விவகாரம் அல்லாஹ்வின் கையில் உள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் மூலமாக இஸ்லாத்தின் தூதுச் செய்தியை உலகின் மூலை முடுக்குகள் வரை கொண்டு சேர்க்கும் பணியை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மூலமாக அல்லாஹ் செய்ய வைக்கின்றான். இன்ஷா அல்லாஹ்! இது பரவும், செழித்து வளரும். இந்த இறைப்பணியை எவராலும் தடுக்க இயலாது. ஆனால் ஒவ்வோர் அஹ்மதியும் நினைவில் வைக்க வேண்டியது என்னவென்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின்

வாதத்தை ஏற்றுக் கொள்வது மட்டும் போதுமானதன்று! அத்துடன் அல்லாஹ்வால் அனுப்பப்பட்டுள்ள போதனையின் உண்மையான முன்னுதாரணமாக திகழ்ந்தவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிமுறைப்படி செயல்படக்கூடிய செயல் வடிவமாகி அந்தத் தூய மாற்றங்களை நமக்குள்ளும் உருவாக்க வேண்டும். இது நிகழ்ந்தால்தான் அல்லாஹ்வுடைய அருள்களுக்கும் நாம் வாரிசாக ஆக முடியும். அல்லாஹ் நமக்கு இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

*இதற்குப் பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அநீதியிழைக்கப்பட்ட பாலஸ்தீனத்து முஸ்லிம்களுக்காக மீண்டும் மீண்டும் துஆவுக்காக கவனமூட்டியவாறு கூறினார்கள்:*

பாலஸ்தீனர்களுக்காகவும் துஆக்களை செய்து வாருங்கள். அவர்கள் மீது செய்யப்படுகின்ற அநீதியிலிருந்து அவர்களுக்கு அல்லாஹ் இரட்சிப்பை வழங்குவானாக! வாழ்க்கைக்குத் தேவையான உதவிப் பொருட்கள் வந்தடைய வேண்டும் என்பதற்காக சில நாட்களுக்காகப் போர் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. ஆனால், அதற்குப் பிறகு என்ன நிகழும்? உதவியைச் சென்றடைய வைத்த பிறகு மீண்டும் அவர்களைக் கொல்வார்கள். இஸ்ரேலிய அரசாங்கத்தின் நோக்கம் அபாயகரமானதாகத் தெரிகிறது. ஏனென்றால், அந்த அரசாங்கத்தின் சிறப்பு ஆலோசகர் ஒருவர் நேற்றோ அதற்கு முந்தைய நாளோ அறிவிக்கும்போது, இந்தப் போர் நிறுத்தத்திற்குப் பிறகு உடனடியாகப் போரை ஆரம்பிக்கவில்லை என்றால் நான் இந்த அரசை விட்டு வெளியேறி விடுவேன் என்று கூறியிருக்கிறார். அவர்களின் சிந்தனைகள் இவ்வாறானவையாக உள்ளன! வல்லரசுகள் அனுதாபங்களைப் பற்றி வெளிப்படையாக பேசுகின்றனதான்! ஆனால் அவர்கள் நீதியை நிலை நாட்ட விரும்பவில்லை. இந்த விவகாரத்தில் நிதானத்தைக் கடைபிடிக்க விரும்பவேயில்லை. இந்தப் போர் ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குட்பட்டதாக இருக்கும் என்று அவர்கள் நினைக்கின்றனர். (ஆனால்) அவர்களுக்கு இது பற்றிய அறிவு இல்லை. ஆனால் அவர்களுள் அறிவுள்ளவர்கள் இதைப் பற்றி பேச ஆரம்பித்து விட்டார்கள். இந்தப் போர் அந்தப் பகுதிகளுக்கு உட்பட்டதாக இருக்காது; மாறாக வெளியேயும் பரவும்; அவர்களுடைய நாடுகள் வரையும் வந்தடைந்து விடும் என்று பேசுகின்றனர்.

முஸ்லிம் அரசாங்கங்கள் கொஞ்சம் பேச ஆரம்பித்துள்ளன. உதாரணமாக, சவுதி அரசரும் பேசும்போது, முஸ்லிம்களுடைய குரல் ஒரே குரலாக இருக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார். ஒரே குரலாக ஆகவேண்டும் என்றால் அதற்காக தக்க முயற்சியையும் மேற்கொள்ள வேண்டும். இது பற்றிய உணர்வு அவர்களிடம் தோன்றி விட்டது என்றால், அதை செயல்படுத்தக்கூடிய நல்வாய்ப்பையும் அல்லாஹ் அவர்களுக்கு வழங்குவானாக! எவ்வாறிருப்பினும் துஆக்களின் பக்கம் அதிக கவனம் செலுத்துங்கள்.

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஐந்து மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துக் கூறியவாறு அவர்களின் ஜனாஸா தொழுகையைத் தொழ வைப்பதாக அறிவித்தார்கள். அவர்களின் பெயர்கள்: ஜமாஅத்தின் முரப்பியாகிய மதிப்பிற்குரிய அப்துஸ் ஸலாம் ஆரிஃப் சாஹிப், கனடாவைச் சார்ந்தவரும் முன்னாள் நாயிப் நாஸிர் பைத்துல் மால் கர்ச் –ம் ஆகிய மதிப்பிற்குரிய முஹம்மத் காசிம் கான் சாஹிப், ஜமாஅத்தின் பிரசித்திப்பெற்ற கவிஞரான மதிப்பிற்குரிய அப்துல் கரீம் குத்ஸீ சாஹிப், மதிப்பிற்குரிய மியா(ன்) ரஃபீக் அஹ்மத் கோந்தல் சாஹிப் மற்றும் லாகூர் மாடல் டவுனில் ஷஹீதான சய்யித் லயீக் அஹ்மத் சாஹிப் அவர்களின் மனைவியாகிய அமெரிக்காவைச் சார்ந்த மதிப்பிற்குரிய நசீமா லயீக் சாஹிபா ஆகியோர். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அனைத்து மர்ஹூம்களின் மக்ஃபிரத் மற்றும் உயர் அந்தஸ்த்து ஆகியவற்றிக்காக துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا مَنْ یَّھْدِہِ اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ اَنْ لَّآ اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ رَحِمَکُمُ اللّٰہُ اِنَّ اللّٰہَ یَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**